25 MAR 1999

தமிழ்நாடு அரசு 400815

சுருக்கம்

கல்வித்தகுதி - எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை - உதவிப்பணி மேலாளர் பதவிக்கு வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதிக்கு நிகராக ஒருங்கிணைந்த பாடத்திட்ட முறையின் கீழ் அச்சுத் தொழில் நுட்பவியலில் பட்டயப் படிப்பினை வரையறை செய்தல் - அங்கீகாரம் செய்தல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

செய்தி மற்றும் சுற்றுலா (எஅ.1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.27 நாள் : 15.2.99

படிக்கப்பட்டது :

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடிதம் எண். 1768/ஆர்.என்.டி-95/98, நாள் 19.5.98.
2. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநரின் கடிதம் எண். ஈ2/19305/98-1, நாள் 19.8.98.

------

ஆணை :

பார்வை ஒன்றில் குறிப்பிட்டுள்ள தனது கடிதத்தில் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் உதவிப் பணி மேலாளர் பதவிக்கு வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதிக்கு நிகராக ஒருங்கிணைந்த பாடத்திட்ட முறையின் கீழ் அச்சுத் தொழில் நுட்பவியலில் பட்டயப் படிப்பினை வரையறை செய்து ஆணைகள் வெளியிடுமாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளர் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளர் 20.3.98 ஆம் நாளன்று நடத்திய தேர்வாணைய கூட்டத்தின் 2(xi) தீர்மானத்தில் பின்வருமாறு கொள்ள வேண்டுமென்று பார்வை 1ல் காணும் கடிதத்தில் கூறியுள்ளார் :

"உதவிப்பணி மேலாளர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிக்கு அதாவது லெட்டர்பிரஸ் அல்லது ஆப்செட்டில் அச்சுத் தொழில் நுட்பவியலில் பட்டயப் படிப்புக்கு நிகராக அச்சுத் தொழில் நுட்பவியல் பட்டயப் படிப்பினை அங்கீகரிக்குமாறு பரிந்துரை செய்வதென்று தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது".

இதற்கான ஆணையைப் பிறப்பிக்குமாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. இது தொடர்பாக எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநரும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்கலாம் என பார்வை இரண்டில் காணும் 19.8.98 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

4. பத்தி-2ல் கூறப்பெறும் கருத்துருவை அரசு தீவிரமாகப் பரிசீலித்தது. அதன்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மேலே பத்தி-2ல் கூறியுள்ள

த.பி.பா.

கருத்தினை ஏற்று எழுதுபொருள் மற்றும் அச்சுப் பணியில் உதவிப்பணி மேலாளர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிக்கு அதாவது 'லெட்டர்பிரஸ்' அல்லது 'ஆப்செட்டில்' அச்சுத் தொழில் நுட்பவியலில் பட்டயப் படிப்பிற்கு நிகராக அச்சுத் தொழில் நுட்பவியல் பட்டயப் படிப்பினை எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் உதவிப்பணி மேலாளர் பதவிக்கு வேலை வாய்ப்பிற்காக அங்கீகரித்திடவும் அரசு ஆணையிடுகிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி /

சி. இராஜரெத்தினம்
அரசு செயலாளர்

பெறுநர்

அனைத்து அரசுச் செயலர்கள், தலைமைச் செயலகம், சென்னை-9.
அனைத்துத் துறைத் தலைமை அலுவலர்கள்.
செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.
எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநர், சென்னை-2.

நகல் :

அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை-9.
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
உதிரிகள்.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

[signature]
பிரிவு அலுவலர்
(தோ.கி)
18/2/99.
18299